# கன்னன்குடா கிராமத்தில் கூத்துக் கலையின் பயில்வும் அதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளும்

**வடிவேல் இன்பமோகன்**[1]

**ஆய்வுச் சுருக்கம்**

கன்னன்குடா கூத்துக்கலையின் வளர்ச்சியில் நீண்ட பாரம்பரியத்தையும் வரலாற்றையும் கொண்டதொரு கிராமமாகும். கன்னன்குடாவில் திறமைவாய்ந்த அண்ணாவிமார், கூத்தர்கள், கொப்பியாசிரியர்கள், பக்கப்பட்டுக் கலைஞர், மேஸ்திரிமார் வாழ்ந்து வருகின்றனர். கூத்துடன் தொடர்புடைய இச்செயற்பாடுகள் அச்சமூக உறுப்பினரிடையே பாரம்பரியமாக கையளிக்கப்பட்டு வருகின்றது. இக்கிராம மக்களின் வாழ்வியல் வழக்காறுகள் கூத்தின் பயில்வை முன்னெடுப்பதற்கேற்ற விதத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இதனால் இக்கிராமத்தில் கூத்தின் பயில்வு சிறப்பான முறையில் முன்னெடுக்கப்படுகின்றது. இக்கிராமத்தின் கூத்து செயற்பாடு இப்பிரதேச கூத்துக்கலை வளர்ச்சியில் பெரும் பங்காற்றுவதாகவும் உள்ளது. இவ்வாய்வு மட்டக்களப்பின் கூத்துக்கலை வளர்ச்சியில் கன்னன்குடா கிராமத்தின் இடத்தினைத் மதிப்பிடல், கூத்துச் செயற்பாட்டில் கன்னன்குடா கிராமம் ஆற்றும் பங்களிப்பை அடையாளப்படுத்தல், கன்னன்குடாவின் கூத்துக்கலை வளர்சியில் செல்வாக்குச் செலுத்தும் சமூக, பொருளாதார, பண்பாட்டுக் காரணிகளை அடையாளப்படுத்தல் என்பனவற்றை நோக்களாகக் கொண்டுள்ளது. இது ஒரு சமூகம் தொடர்பான ஆய்வாக விளங்குவதால் விளக்கமுறையியல் (Exploratory method) இவ்வாய்வில் பின்பற்றப்படுகின்றது. பண்புசார் ஆய்வு முறையியல் (Qualitative research design) எனும் ஆய்வு நுணுக்கம் பின்பற்றப்பட்டு பரிந்துரைகளும் முடிவுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. கன்னன்குடா கிராமத்தின் கூத்துச் செயற்பாடுகளின் வளர்ச்சியை சுட்டிக்காட்டி அதனை முன்னுதாரணமாகக் கொண்டு மட்டக்களப்பின் கூத்துச் செயற்பாட்டை முன்னெடுப்பதில் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகளுக்கான தீர்வை வழங்க அல்லது கண்டறிய முயற்சித்தல் இவ்வாய்வின் பரிந்துரையாக அமையும். இது மட்டக்களப்பின் பல்வேறு பிரதேசங்களிலும் வீழ்சியுற்றிருக்கும் கூத்துச் செயற்பாட்டை மீண்டும் வளர்த்தெடுப்பதற்கான ஆலோசனையாக அமையும்.

**பிரதான சொற்கள்:** கூத்துக்கள், அண்ணாவியார், கொப்பியாசிரியர், மேஸ்திரி, கூத்தெழுதும் புலவர்

## அறிமுகம் (Introduction)

மட்டக்களப்பின் கலைச் செயற்பாட்டில் பாரம்பரிய கலைகளின் இடம் தனித்துவமானது. இவை மக்களின் வாழ்வியல் அம்சங்கள் பலவற்றுடனும் பின்ணிப்பிணைந்தும் மட்டக்களப்பு மக்களின் பாரம்பரிய கலையடையாளமாகவும் திகழ்பவை. மட்டக்களப்பில் பல பாரம்பரிய கலைகள் பயிலப்பட்டாலும் இவற்றுள் வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. இவ்வடிவங்கள் இரண்டும் அவற்றின் பயிற்சி, அளிக்கை என்பவற்றில் நீண்ட செயற்தொடரைக் கொண்டதாகவும் சமூகத்தின் முழு ஈடுபாடும் அற்பணிப்பும் இவற்றின் அளிக்கையில் அடிப்படையானதாகவும் விளங்குகின்றது. சமகாலத்தில் பாரம்பரிய கலைகள் பயிலப்பட்டு வந்த ஆரையம்பதி, தாளங்குடா, களுதாவளை, செட்டிபாளையம், குருக்கள்மடம் போன்ற கிராமங்களில் அவை விடுபட்டுள்ள நிலையையும் இருந்தும் மண்முனை தென்மேற்கு மற்றும் மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவு என்பவற்றில் இவற்றின் பயில்வு சிறப்பாக முன்னெடுக்கப்படுவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இந்நிலையில் இவ்வாய்வில் மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள ஒரு கிராமமான கன்னன்குடா கிராமத்தை அடிப்படையாக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. கன்னன்குடாப் பிரதேசத்தில் கூத்துக்கலையின் வளர்ச்சியையும் அக்கிராமத்தில் கூத்துக்கலை சிறப்பான முறையில் பயிலப்படுவதற்கான பின்புலங்களையும் தெளிவுபடுத்துவதன் மூலம் மட்டக்களப்பில் கூத்துக்கலையை வளர்த்தெடுப்பது தொடர்பான சில ஆக்கபூர்வமான கருத்துக்களை இவ்வாய்வு முன்வைக்கும்.

## இலக்கிய மீளாய்வு (Literature Review)

மட்டக்களப்பில் கூத்துக்கலை பற்றி பல ஆய்வுகள் வெளிவந்துள்ளன. சி.மொனகுரு அவர்களின் "மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்" (1998) மட்டக்களப்பு கூத்துப் பற்றிய முக்கியமான ஒரு ஆய்வு முயற்சியாக அமைகின்றது. இந்நூலில் அவர் மட்டக்களப்பில் பயிலப்பட்டு வரும் பாரம்பரிய அரங்க

To whom correspondence should be addressed: vinpamohan@yahoo.com

[1] Senior Lecturer, Department of Fine Arts, Eastern University, Sri Lanka.

வடிவங்கள் பற்றிய நோக்கை தருவதுடன் வடிமோடி, தென்மோடிக் கூத்துக்கள் பற்றிய பல்வேறு விடயங்களையும் தருகின்றார். சு.வித்தியானந்தன் அவர்களின் அரங்கு பற்றிய கட்டுரைகளின் தொகுப்பாக வெளிந்த "நாடகம் நாட்டாரியற் சிந்தனை"(1990) மட்டக்களப்பு கூத்துக்கள் கிராமிய மக்களின் இரசனைக்கு உரியனவாக இருக்கின்றன என்பதைச் கூட்டிக்காட்டி அதனை சகல மக்களின் இரசனைக்குரியதாக மாற்றும்போது அதன் பயில்வில் உள்ள தேக்கநிலையை இல்லாது செய்யமுடியும் என்பதைக் குறிப்பிட்டு, அதனை எவ்வாறு பேணவேண்டும் என்பது தொடர்பான சில எதிர்வு கூறல்களையும் தருகின்றார். அடுத்து மட்டக்களப்பு கூத்துக்கள் தொடர்பன சி.ஜெயசங்களர் அவர்களின் "கூத்து மீளுருவாக்கம் : கூத்தின் புதிய பரிமாணம்" (2011) என்னும் கூத்து தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு அடுத்துக் குறிப்பிடத்தக்கது. இது கூத்தை புதிய சமூகச் சூழலில் ஆரோக்கியமாக பேணுவது தொடர்பான ஆய்வாக அமைந்திருந்தது. இங்கு கூத்தில் சில தொய்வான இடங்கள் உள்ளன என்பதை சுட்டிக்காட்டும் இவர் அதனை நிவர்த்தியாக்கி கூத்தாடும் சமூகத்தினருடன் இணைந்து கூத்துச் செயற்பாட்டை முன்னெடுக்கும் போது அது கூத்தின் தொடர் பயில்வுக்கு பங்களிப்புச் செலுத்தும் என்பதை அவர் தெளிவுபடுத்தியிருந்தார். இவையே மட்டக்களப்புக் கூத்துத் தொடர்பான முக்கியமான ஆய்வு முயற்சிகளாகக் கொள்ளப்படத்தக்கன.

மேற்கூறித்த ஆய்வுகள் மட்டக்களப்பு கூத்தின் வீழ்ச்சிக்கான காரணங்களையும் அவற்றை புதிய சமூகச் சூழலில் பேணுவதற்கான ஆக்கபூர்வமான கருத்துக்களையும் முன்வைத்தன. இவ்வாய்வில் கன்னன்குடா கிராமத்தில் கூத்து தொடர்ந்து பயிலப்படுவதற்கான சாத்தியப்பாடுகளையும், பயில்வின்போது அவர்கள் எதிர்கொள்ளும் சபால்களையும் அடையாளம் காண்பதன் ஊடாக கன்னன்குடா கிராமத்தில் கூத்தின் பயிவைத் தொடர்வதற்கு வாய்பாக உள்ள காரணிகள் அடையாளங்காணப்படும். கன்னன்குடா கிராமத்தை முன்னுதாரணமாகக் கொண்டு மட்டக்களப்பில் கூத்துக்கலை விடுபட்ட அல்லது வீழ்சியடைந்த பிரதேசங்களில் கூத்தின் பயில்வை தொடர்ந்து முன்னெடுப்பதற்கான சில அடிப்படைகளை கன்டறிய முயற்சிக்கப்படும். கூத்துக் கலை தொடர்பாக இவ்வாறான ஒரு ஆய்வு குறிப்பாக கூத்து இன்று ஓரளவு நல்ல நிலையில் பயிலப்படும் கன்னன்குடா கிராதத்தை அடிப்படையாகக் கொண்டு இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. இவ்வடிப்படையில் புதிய ஆய்வுத் தேவையின் அவசியத்தை ஆய்வாளர் உணர்ந்து கொள்கின்றார்.

### ஆய்வு முறையியல் (Materials and Methods)

இந்த ஆய்வு பாரம்பரிய கலைகளில் ஒன்றான கூத்துக்கலை கன்னன்குடா கிராமத்தில் பயிலப்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை கண்டறிவதன் ஊடாக கூத்துக்கலையின் பயில்வில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைக் கண்டறிவதை நோக்காகக் கொண்டுள்ளது. ஏற்கனவே இவ்ஆய்வுத்துறை தொடர்பான சில விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ள நிலையில் கூத்துக்கலை தொடர்பாக புதிய ஒரு விடயத்தை கண்டறிவதை இவ்வாய்வு நோக்காகக் கொண்டுள்ளது. இவ்வடிப்படையில் இவ்வாய்வில் விளக்க முறையியல் (Exploratory Method) கையாளப்படுகின்றது. அத்துடன் இது சமூகம் தொடர்பான ஆய்வாக விளங்குவதால் பண்புசார் ஆய்வு முறையியல் (Qualitative Research Design) எனும் ஆய்வு நுணுக்கம் பின்பற்றப்படுகிறது. கட்டமைப்பற்ற நேர்காணலும் (Unstructure Interview) தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவினருடனான கலந்துரையாடலும் (Focus Group Discussion) ஆய்வுக்கான கருவிகளாகப் (Research Tools) பயன்படுத்தப்படுகின்றன. பிரதான தகவல் வழங்கி (Key Informatory ) Snowball Method என்பன Sampling Technique ஆகப் பயன்படுத்தப்படும். பண்புசார் அடிப்படையில் தகவல்கள் நுணுகி ஆராயப்பட்டு பண்புசார் அடிப்படையில் பரிந்துரைகளும் முடிவுகளும் பெற்றுக்கொள்ளப்படும்.

### கருத்துரையும் பெறுபேறும் (Results and Discussion)

கன்னன்குடா மட்டக்களப்பு நகரில் இருந்து 9 கி.மீ தொலைவில் அமைந்துள்ள ஒரு விவசாயக் கிராமமாகும். நிலமானிய சமூக அமைப்பின் அடிப்படைகளை இன்றுவரை பேணும் ஒரு கிராமமாகவே விளங்குகின்றது. போடி அமைப்பும் அவர்களுக்கு தொண்டுழியம் செய்யும் சமூக அமைப்பினரையும் இன்றுவரை கணமுடிகின்றது. விவசாயம் பிரதான தொழில் முயற்சியாகவும் அதனுடன் கால்நடை வளர்ப்பு, மீன்பிடி, காட்டுடன் தொடர்புடைய விறகு வெட்டுதல், மரம் வெட்டுதல் என்னும் தொழில்களிலும் ஈடுபடுகின்றனர்.

சமூக வளர்ச்சி காரணமாக கல்வியில் கன்னன்குடா கிராமமும் வளர்ச்சியடைந்து வருவதனால் அரச தொழில் பார்ப்போர் வீதமும் அதிகரித்துக்கொண்டு வருகின்றது. கிராம சேவை அதிகாரியின் அறிக்கையில் உள்ளவாறு 2017 ஆண்டில் கன்னன்குடாவின் மொத்தச் சனத்தொகை 1090 ஆகும். இங்கு 348 குடும்பங்கள் உள்ளன. 125 விவசாயிகளும் 175 கூலி வேலை செய்வோரும் 84 மீன்பிடித்தலில் ஈடுபடுவோரும் 48 அரசாங்க உத்தியோகஸ்தர்களும் உள்ளனர். தொழில் இல்லாது இருப்போர் 84 பேர் என அடையாளங்காணப்பட்டுள்ளனர் (சதாகரன்,த., மன்முனை மேற்கு பிரதேச செயலகம்). கன்னன்குடாவில் கிராமியச் சூழல் முழுமையாக விடுபட்டுப் போகாத தன்மையைக் மேற்குறித்த தகவல்களின் மூலம் உய்துணர முடியும்.

கன்னன்குடா கிராம மக்கள் இந்துசமய வழிபாட்டு முறையினைப் பின்பற்றுபவர்களாக விளங்குகின்றனர். அவர்களின் கிராமத்தில் அமைந்திருக்கும் கண்ணகியம்மன் கோயில் அவர்களின் நம்பிக்கைக்குரிய முக்கிய வணக்கத்தலமாக விளங்குகின்றது. பாரம்பரிய சடங்கு வழிபாட்டு முறையையே இவர்களின் வணக்க முறையில் முக்கியத்துவம் பெறுகின்றது. இங்கு வைகாசி மாத்தில் நடைபெறும் சடங்கு வழிபாட்டை சிறப்பாக வருடாவருடம் நடாத்துவதில் கிராம மக்கள் எல்லோரும் முழு ஆர்வத்துடன் ஒன்றிணைவர். கண்ணகியம்மனே அவர்களின் வாழ்வில் ஏற்படும் பல்வேறு இடையூறுகளையும் போக்கி அவர்களை வழிபடுத்துகின்றாள் என்னும் நம்பிக்கை கன்னன்குடா மக்களிடம் காணப்படுகின்றது (சிவநிதி,நே., புதுமண்டபத்தடி).

கன்னன்குடா கிராமம் பாரம்பரிய மரபுகளையும் நம்பிக்கைகளையும் பொருளாதார ஈட்டத்தையும் பேணும் ஒரு கிராமமாக இன்றுவரை விளங்குகின்றது. இளந்தலைமுறையினர் கல்வி, அரச தொழில் வாய்ப்பு என்பனவற்றில் ஆர்வம் காட்டினாலும் பாரம்பரிய மரபுகளைப் பேணவேண்டும் என்பதில் ஆர்வமுடயவர்களாகவே விளங்குகின்றனர். இப்பின்புலத்திலேயே அவர்களிடம் கூத்துக்கலை நின்று பயிலப்படுவதை நோக்க வேண்டும்.

1950கள், 1960களில் மட்டக்களப்பில் சீனித்தம்பி என்பவர் தேர்ந்த அண்ணாவியாக இருந்துள்ளார். அம்பட்டர் சமூகத்தைச் சேர்ந்தவராக இவர் விளங்கியதால் இவர் ''அம்பட்டன் சீனியன்'' என்று கூத்தர் சமூகத்தில் அழைக்கப்பட்டார். அக்காலத்தில் இவர் நாவற்காடு, ஈச்சந்தீவு, கரவெட்டி, விளாவட்டுவான், கன்னன்குடா போன்ற கிராமங்களில் கூத்துப் பழக்கியுள்ளார். இவரின் ஒத்துளைப்புடன் கன்னன்குடாவைச் சேர்ந்த அண்ணாவிமாரான மயில்வாகனம், பொன்னம்பலம், இளையதம்பி, நாகமணிப்போடி, நோஞ்சிப்போடி என்போர் கூத்துக்களை கன்னன்குடாவின் இரண்டு வட்டாரங்களிலும் பழக்கியுள்ளனர். இவர்கள் மட்டக்களப்பிலேயே பெயர்பெற்ற அண்ணாவிகளாக விளங்கியுள்ளனர் (பசுபதி,மா., முண்டாளமடு). அண்ணாவியின் கலைத் தராதரம் பற்றி சி.ஜெயசங்கள் அவர்கள் ''ஆட்டம், பாட்டு, தாளக்கட்டு, மத்தள அடி, கூத்தறிவு, பெண் கூத்து ஆட்ட வல்லமை என்ற ஆற்றல்கள் சங்கமித்த கலை ஆளுமையை ''அவன் அண்ணாவி'' என்று கூத்துச் சமூகம் வாய்விட்டு அங்கிகரிக்கும்'' (2011:23) என தெரிவித்த விடயங்களுக்கு அப்பால் கன்னன்குடாவில் கூத்துச் செயற்பாட்டில் ஈடுபட்ட அண்ணாவிமார் கூத்தெழுதும் புலவர்களாகவும் பல்வேறு சமூக ஆளுமைகளைக் கொண்டவர்களாகவும் விளங்கினர்.

அக்காலத்தில் மாரியர் என்பவர் முன்னீடுகாரராகவும் பெண் கூத்துக்களை ஆடுவதில் தேர்ச்சியுடையவராகவும் நிகழ்ந்துள்ளார். கன்னன்குடாவில் அக்காலத்தில் சிறந்த கூத்து எழுதும் புலவராக நா.கணபதிப்பிள்ளை என்பவர் செயற்பட்டுள்ளார். இவர் ஒரு நாட்டு வைத்தியராகவும் விளங்கியவர். இதனை விட மா.சிதம்பரப்பிள்ளை என்பவரும் ஒரு கூத்து எழுதும் புலவராகும். சிதம்பரப்பிள்ளை ஒரு சிறந்த பூசாரியாகவும் செயற்பட்டவர் (சிந்தாத்துரை,சி., கன்னன்குடா). அக்காலத்தில் கன்னன்குடா கிராமத்தில் பல சிறந்த கூத்தர்கள் வாழ்ந்துள்ளனர். ஆ.சுப்பிரமணியம், வை.தில்லையம்பலம், இ.கணபதிப்பிள்ளை, கு.சதாசிவம், க.கந்தசாமி, பொன்னம்பலம் என இப்பட்டியல் நீண்டு கொண்டே செல்லும் (சிந்தாத்துரை,சி.,கன்னன்குடா). இவர்கள் தங்களுக்கென சிறப்பான ஆட்ட நுணுக்கங்களைக் கொண்டவர்கள். இவர்கள் கன்னன்குடா கூத்தர்களுக்கு சிறந்த பெயரைப் பெற்றுக் கொடுத்தவர்கள். இப்பரம்பரையினரே கன்னன்குடாவில் கூத்துக்கலையின் மூத்த உறுப்பினர்களாகக் கொள்ளப்படத் தக்கவர்கள்.

அக்காலத்தில் இவர்களால் பல பெயர்பெற்ற கூத்துக்கள் அரங்கேற்றப்பட்டுள்ளன. மயில்வாகனம் அவர்கள் அம்பட்டன் சீனியன் அண்ணாவியாருடன் இணைந்து பழக்கிய ''பவளவல்லி நாடகம்'' (தெ)[1], அவர் தனியாகப் பழக்கிய ''சராசந்தன் போர்'' (வ)[2], 17ஆம் 18ஆம் நாள் போர் (வ), பொன்னம்பலம் அவர்களின் ''வைகுந்தம்'' (வ), ''நல்லதங்காள் நாடகம், (வ), இளையதம்பி அவர்களின் ''சித்திரபுத்திர நாடகம்'' (தெ), பட்டணத்தார் நாடகம் (தெ), ''சாரங்கரூபன்'' (தெ), நாகமணிப்போடி அவர்களின் ''அல்லி நாடகம்'' (தெ), ''அலங்பாரரூபன் நாடகம்'' (தெ), ''அனுருத்திர நாடகம்'' (தெ), ''பப்பரவாணன் நாடகம்'' (வ), ''குருக்கேத்திரன் போர்'' (வ) ''பவளவல்லி நாடகம்'' (தெ), ''தலுக்குச் சுந்தரி'' (தெ) (இக்கூத்தை அவரே எழுதினார்) பசுபதி அண்ணாவியாருடன் நாகமணிப் அண்ணாவியார் இணைந்து பழக்கிய ''மாடுபிடி சண்டை'' (வ), தருமபுத்திர நாடகம்'' (வ), நோஞ்சிப்போடி அண்ணாவியர் பழக்கிய ''சத்தியவான் சாவித்திரி'' (தெ), ''லீலாவதி நாடகம்'' (தெ), ''சிவராத்திரி'' (வ) என்பன குறிப்பிடத்தக்க கூத்துக்களாக விளங்குகின்றன. நோஞ்சிப்போடி அண்ணாவியர் பழக்கிய கூத்துக்கள் அனைத்தையும் அவரே எழுதிப் பழக்கினார்.

அடுத்த தலைமுறையினரைச் சேர்ந்த அண்ணாவிமாராக சி.பாலகப்போடி அண்ணாவியார், பரமக்குட்டி என்போர் விளங்குகின்றனர். பாலகப்போடி, பரமக்குட்டி தலைமுறைக்குப் பின்னர் மா.பசுபதி, அண்ணாவியாரையும் இன்று வாழும் இளம் தலைமுறையைச் சேர்ந்த அண்ணாவிமாராக வினாயகலிங்கம், சன்முகநாதன், திசைவீரசிங்கம், அழகிப்போடி, கதிர்காமநாதன் என்போரையும் குறிப்பிடலாம். இவர்களில் பாலகப்போடி இறந்துவிட்டார். ஏனையோர் அனைவரும் கூத்துச் செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஏனைய பிரதேசங்களைப் போன்று யுத்தகாலத்தில் கூத்துச் செயற்பாட்டினை முன்னெடுப்பதில் சில சபால்களை எதிர்கொண்டுள்ளனர். இருந்தும் இக்காலத்தில் பல கூத்துக்களை அரங்கேற்றியுள்ளனர். இக்காலத்தில் அண்ணாவிமார்களான நோஞ்சிப்போடி, நாகமணிப்போடி பாலகப்போ, பரமக்குட்டி, பசுபதி, என்போரே கூத்துச் செயற்பாட்டில் ஈடுபட்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். நானமணிப்போடி அண்ணாவியாரின் 17ஆம் 18ஆம் நாள் போர் (வ), தருமபுத்திர நாடகம் (வ), மாடுபிடிசண்டை (வ) என்பனவும் நோஞ்சிப்போடி அண்ணாவியாரின் சூரசங்காரம், சிவராத்திரி (வ), இரணிய சஞ்காரம், மதுரவாசகன் நாடகம், தருமர் அஸ்வமேத யாகம் (வ) என்பனவும் பரமக்குட்டி அண்ணாவியாரின் சித்திரபுத்திரன் (தெ) (இணையதம்பியுடன் இணைந்து), பட்டினத்தார் (வ), 13ஆம் 14ஆம் நாள் போர் (வ), பக்காத்திருடன் (தெ) என்பனவும் பாலகப்போடி அண்ணாவியரின் சதாதந்தன் போர் (வ), 17ஆம் 18ஆம் நாள் போர் (வ) என்பனவும் பசுபதி அண்ணாவியாரின் அல்லி நாடகம் (தெ) (பாலகப்போடியுடன் இணைந்து), அனுருத்திர நாடகம் (தெ), பவளக்கொடி நாடகம் (வ) என்பனவும் யுத்தகாலத்தில் இடம்பெற்ற கூத்து முயற்சிகளில் குறிப்பிடத்தக்கனவாக விளங்குகின்றன.

கன்னன்குடாவில் தற்போது கண்ணகி முத்தமிழ் மன்றம், கன்னங்குடா கலைஞர் என்னும் இரு பிரிவினர் கூத்துச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் கண்ணகி முத்தமிழ் கலாமன்றம் 1990களில் இருந்து ஒரு பதிவு செய்யப்பட்ட அமைப்பாகச் செயற்படுகின்றது. சமகாலத்தில் இவ்விரு பிரிவினருமே கூத்துச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். அண்மைக்கால இவர்களின் கூத்துச் செயற்பாடுகள் கீழே தரப்படுகின்றன.

முத்தமிழ் கலா மன்றத்தினர்

| | |
|---|---|
| வாரன யுத்தம் (வ) | - 2017 |
| பகல் இரவுப் போர் (வ) | - 2016 |

[1] தென்மோடிக் கூத்து
[2] வடமோடிக் கூத்து

| | | |
|---|---|---|
| | சிலம்புச் செல்வி (தெ) | - 2015 |
| | வள்ளியம்மன் நாடகம் (வ) | - 2015 |
| | அலங்கார ரூபன் நாடகம் (தெ) | - 2014 |
| | சூரசம்காரம் (வ) | - 2014 |
| | சுபத்திரை கல்யானம் (வ) | - 2013 |
| | சாம்பேந்திரன் நாடகம் (தெ) | - 2012 |
| | 17ஆம் 18ஆம் நாள் போர் (வ) | - 2012 |
| | 13ஆம் 14ஆம் நாள் போர் (வ) | - 2011 |
| | விராட பருவம் (வ) | - 2010 |
| கன்னன்குடா கலைஞர் | நல்லதங்காள் நாடகம் (வ) | - 2016 |
| | வீரகுமாரன் நாடகம் (வ) | - 2015 |
| | திருத்தொன்டர் நாடகம் (வ) | - 2014 |

கன்னன்குடாவில் கூத்துச் செயற்பாட்டில் ஈடுபட்டோர் சிறந்த போடிமாராகவும், வைத்தியராகவும், பூசாரியாகவும் மந்திர ஆற்றல் வாய்க்கப்பெற்றவர்களாகவும், கூத்து எழுதும் புலவர்களாகவும் பல்வேறு ஆளுமைத் திறன்களைக் கொண்டு விளங்கினர். எடுத்துக்காட்டாக நோஞ்சிப்போடி கூத்தெழுதும் புலவராகவும் அண்ணாவியாகவும் விளங்கியவர். இவர்கள் கன்னன்குடாக் கிராமத்தில் பல ஏக்கர் வயல் நிலங்களுக்குச் சொந்தமான போடியாராக விளங்கியவர். பொருளாதார ரீதியான பலம் உள்ளவராக விளங்கியதுடன், பூசாரித்தொழில் மாந்திரிகம் என்பவற்றிலும் தேர்ச்சியும் புலமையும் உடையவராக விளங்கியதால் சமூகத்தில் உயர் நிலையில் வைத்து நோக்கப்பட்டார் (பசுபதி,மா., முண்டாளமடு).

கன்னன்குடாவில் அமைந்துள்ள கண்ணகியம்மன் கோயிலில் அரங்கேற்றுவதற்கு ஏற்றவிதத்தில் கூத்துக்களை பழக்குவர். பொதுவாக கண்ணகியம்மன் கோயிலிலேயே கூத்துக்களை அரங்கேற்றுவர். தொடர்ந்து மட்டக்களப்பின் பல பகுதியிலும் உள்ள கோயில்களிலும் இவர்களின் கூத்துக்கள் ஆடப்படும். 2016ஆம் ஆண்டில் ''பகல் இரவுப் போர்'', ''நல்லதங்காள் நாடகம்'' என்னும் இரு கூத்துக்கள் ஒவ்வொன்றும் சுமார் 40க்கும் மேற்பட்ட இடங்களில் ஆடப்பட்டடுள்ளன (சிவநிதி,நே., புதுமண்டபத்தடி). ஏனைய கிராமத்தவர்கள் கன்னன்குடா கூத்துக்களை அவர்களின் கிராமங்களில் அளிக்கை செய்ய விரும்புவது கன்னன்குடா கூத்துக்களின் கலைத் தராதரத்தை வெளிக்காட்டுவதாக உள்ளது. இது இன்றுவரை கன்னன்குடாக் கலைஞர்கள் அவர்களின் கலைத் தராதரத்தில் இருந்து குறையாமல் தொடர்ச்சியாக கூத்துச் செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதையே காட்டுகின்றது.

மட்டக்களப்பில் கூத்துச் செயற்பாடு பற்றிக் குறிப்பிட்ட சு.வித்தியானந்தன் அவர்கள் ''கிராமத்தில் வாழும் பல்லாயிரக்கணக்கான சாதாரண மக்களின் விலைமதிக்கமுடியாத கலைச் செல்வமாக இருந்து வருகிறது நாட்டுக்கூத்து. நாட்டுக்கூத்து மூலம் பல ஆண்டுகளாக மக்கள் இன்பம் பெற்று நிறைமனதுடன் வாழ்ந்தனர். ஈழத்திலே பல நூற்றாண்டுகளாக யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், சிலாபம் ஆகிய பிரதேசங்களிலே தென்மோடிக் கூத்துக்கள், வடமோடிக் கூத்துக்கள் விலாசங்கள், சபாக்கள், வாசாப்புக்கள் போன்றன ஆடப்பட்டு வந்தன. ஆனால் இன்று இவற்றை ஆடுவோர் தொகை குறைந்துவிட்டது. யாழ்ப்பாணத்திலும் சிலாபத்திலும் இக்கலை விரைவாக அழிந்துகொண்டு வருகிறது. மட்டக்களப்பிலும் மன்னாரிலும் குறை உயிருடன் இக்கலை இயங்கிக் கொண்டிருக்கிறது'' (1990:32-33) எனக் குறிப்பிட்டார். சி.மௌனகுரு அவர்கள்; 1957இல் சு.வித்தியானந்தன் கலைக்கழகத்தின் நாடகக்குழுவின் தலைமைப் பதவியை பொறுப்பேற்றதில் இருந்து ஒரு சகாப்த காலம் கூத்துக்களை பேணுகின்ற, அதனை நவீனப்படுத்துகின்ற தன்மைகளே பிரதான போக்காக அமைந்தது எனக் குறிப்பிட்டு அதற்கமைய ''ஆட்டக்கூத்து முறையும் பழய வட்டக்களரி மேடையமைப்பும் அழியாது இருந்த மட்டக்களப்பிலே குருக்கள்மடம், கல்லாறு, வந்தாறுமூலை, காரைதீவு, புளியந்தீவு ஆகிய இடங்களில் நாட்டுக்கூத்துக்களை மேடையேற்றவும், நடிக்கவும் கலைக்கழகம் ஆதரவு வழங்கி ஊக்குவித்தது'' (2004:13) எனக் குறிப்பிடுகின்றார்.

மேற்குறித்த இரு கூற்றுக்களும் 1960 களில் மட்டக்களப்பில் கூத்துக் கலையின் நிலைமையினைப் படம்பிடித்துக் காட்டுவனவாக விளங்குகின்றன. வித்தியானந்தன் அக்காலத்தில் கூத்துக்கலையின் பயில்வில் ஏற்பட்ட வீழ்ச்சியின் ஆபத்தை உணர்ந்ததன் வெளிப்பாடே 1960களில் கூத்துக்களை பேணுகின்ற, அவற்றை நவீனப்படுத்துகின்ற செயற்பாட்டை மேற்கொள்வதற்கு முன்வந்ததற்குக் காரணமாக அமைகின்றது. இதனைவிட சி.மௌனகுரு அவர்கள் அன்று கூத்துப் பயிலப்பட்டதாக குறிப்பிடும் குருக்கள்மடம் போன்ற கிராமங்கள் எல்லாம் இன்று கூத்து விடுபட்டுப்போன கிராமங்களாகவே விளங்குகின்றன. இருந்தும் இக்காலத்தில் கன்னன்குடா கிராமத்தில் கூத்துக்கலை அம்பட்டன் சீனியன், மற்றும் கன்னன்குடாக் கலைஞர்களான மயில்வாகனம், பொன்னம்பலம், இளையதம்பி, நாகமணிப்போடி, நோஞ்சிப்போடி போன்றோரின் செயற்பாடுகளால் சிறப்பான வளர்ச்சியைப் பெற்றிருந்த காலமாக அக்காலம் அமைந்திருந்தது. இதனைவிட வடகிழக்கில் இடம்பெற்ற யுத்தம் அனேகமான பகுதிகளில் பாரம்பரிய கலைகளின் பயில்வில் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது 1983 யூலை கலவரத்தின் பின்னரேயாகும். யுத்தத்தை கூத்துக்கலையின் வீழ்சிக்கான காரணமாக குறிப்பிடுவது பொதுபோக்காக அறிவியல் தளத்தில் இன்றுவரையுள்ளது. ஆனால் அதற்கு முன்னரே கூத்துகலையின் பயில்வில் வீழ்ச்சி ஏற்பட்டு விட்டதை மேற்குறித்த சு.வித்தியானந்தன், சி.மௌனகுரு ஆகியோரின் கருத்துக்களின் மூலம் நாம் ஊகித்துக் கொள்ளக்கூடியதாக உள்ளது. இருந்தும் யுத்த காலத்திலும் கன்னங்குடா கிராமத்தில் பல பெயர்பெற்ற கூத்துக்கள் ஆடி அரங்கேற்றப்பட்டுள்ளன. 1993இல் பாலகப்போடி அண்ணாவியார் அவர்களால் கன்னன்குடாவில் அரங்கேற்றிய ‘‘அல்லிநாடகம்’’ (தென்மோடிக்கூத்து) அந்தகாலகட்த்தில் ஒரு பேர்பெற்ற கூத்தாக அமைந்திருந்தது. இவற்றின் மூலம் கன்னன்குடாவில் கூத்தின் பயில்வு தொடர்ச்சியாக இடம்பெற்றுள்ளது என்பதை அறியக் கூடியதாகவுள்ளது.

இன்றுவரை மட்டக்களப்பில் கூத்துப் பயிலப்படும் கிராமங்களில் கன்னன்குடா முக்கியமானதொரு கிராமமாக திகழ்வதற்கு பல காரணங்களைக் குறிப்பிடலாம். முதலாவதாக நாம் அவதானிக்கக்கூடிய விடயம் அக்கிராமத்தின் சமூக, பொருளாதார அமைப்பில் பெரியளவான மாற்றங்கள் ஏதும் ஏற்படாது இருப்பதாகும். மட்டக்களப்பின் சமூக அமைப்புப் பற்றி சி.மொனகுரு அவர்கள் 1983 ஆம் ஆண்டு பூர்த்தி செய்த தனது ‘‘மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்’’ என்னும் ஆய்வில் பின்வருமாறு குறிப்பிவார்.

> ‘‘இப்போதைய மட்டக்களப்பின் சமூக அமைப்பினை நாம் நிலமானிய சமூக அமைப்பு எனக் குறிப்பிடலாம். பல ஆயிரக் கணக்கான வயல் நிலங்களை தன்னகத்தே கொண்ட மட்டக்களப்பில் இன்று மிகப் பிரதானமான தொழில் விவசாயமாகும். விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டதும், மட்டக்களப்பிற்கே உரியதுமான நிலமானிய முறை ஒன்று அங்கு நிலவினும் பண்டைய அமைப்பின் எச்சசொச்சங்களான வாழ்க்கை முறைகளையும், மட்டக்களப்பு சமூக அமைப்பிற் காணமுடிகிறது. சமனற்ற வளர்ச்சி என்பது மட்டக்களப்புச் சமூக அமைப்புக்கு பொருந்துகிறது’’ (1998:82).

இந்நிலமானிய பொருளாதார அமைப்பை கொண்ட சமூக அமைப்பு மட்டக்களப்பில் கூத்துச் செயற்பாட்டைப் பேணுவதற்கு அடிப்படையானதும் அவசியமானதுமாக இருந்தது. பிற்காலங்களில் இச்சமூக அமைப்பில் படிப்படியாக மாற்றங்கள் ஏற்பட்டது. இலவசக் கல்வியும் அதன் மூலம் உருவான கற்றோரின் எழுச்சியும் விவசாயத்தை பொருளாதார ஈட்டத்தை இரண்டாம் நிலைக்கு தள்ளியது. அரச தொழில்வாய்ப்பு பிராதன வருவான ஈட்ட மூலமாக கருதப்பட்டது. இது பல கிராமங்களில் பாரம்பரிய கலைகளின் பயில்வைப் பாதித்தது. இருந்தும் முக்குவரை பிரதான சாதியாகக் கொண்ட கன்னன்குடாவில் மட்டக்களப்பில் ஏனைய பிரதேசங்களில் ஏற்பட்ட மாற்றம் போன்று முழுமையாக ஏற்படவில்லை. அரச தொழில, மற்றும் ஏனைய சுய தொழில்களில் மக்கள் ஈடுபட்டாலும் நிலமானிய சமூக அமைப்பின் அடிப்படைகள் தொடர்ந்து பேணப்படுகின்றன. இது கூத்துக்கலையின் பயில்வுக்கு சாதகமான சூழலை இன்றுவரை வழங்கிக் கொண்டிருக்கின்றது. மட்டக்களப்பிலும் மன்னாரிலும் கூத்துக்கள் ஆடப்படுவதற்கான காரணங்களைப் பற்றிக் குறிப்பிட்ட சு.வித்தியானந்தன் அவர்கள் ‘‘மட்டக்களப்பிலும் மன்னாரிலும் பொருளாதாரம் இன்னும் விவசாயத்தையே அடிப்படையாகக் கொண்டது. மக்களின் சமூக வாழ்க்கை சமயத்தோடு பின்னிக் கிடக்கிறது. எனவே… மட்டக்களப்பிலே வடமோடி, தென்மோடிக் கூத்துக்களும் விலாசமும் ஆடப்படுகின்றன.’’ (1990:38-39) எனக் குறிப்பிடும் கருத்துக்கள் கன்னன்குடா கிராமத்திற்கு பொருத்தமுடயனவாகவே விளங்குகின்றன.

கன்னன்குடாவின் சமூக, பொருளாதார அமைப்பு கூத்துச் செயற்பாட்டை தொடர்ச்சியாகப் பேணுவதற்கு உதவியது போன்று, கூத்தை பயிற்றுவிக்கும் அண்ணாவிமார், முன்னீடுகாரர், கூத்தெழுதும் புலவர்கள், கூத்தர்கள், மேஸ்திரிமார் என கூத்துச் செயற்பாட்டிற்கு தேவையான அனைவரும் அக்கிராமத்தில் தொடர்ச்சியாக வாழ்வதற்கும், திறன் கையளிப்பு தொடர்ச்சியாக ஒரு ஒழுங்கு முறையில் மேற்கொள்ளப்படுவதும் கூத்துச் செயற்பாட்டை தொடர்ந்து மேற்கொள்வதறகு வாய்ப்பான சூழலை ஏற்படுத்தியிருந்தது.

பல கிராமங்களில் கூத்தை பயிற்றுவித்து அரங்கேற்றுவதில் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினை கூத்துக்குத் தேவையான கலைஞர்கள் குறித்த கிராமத்தில் இல்லாததாகும். வெளியூர் கலைஞர்களில் கூத்தை பயிற்றுவித்து அரங்கேற்றுவது வரை பல செயற்பாடுகளில் கூத்தர்கள் தங்கியிருப்பதால் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். ஆரம்ப காலங்களில் கன்னன்குடாவிலும் இந்நிலைமை நிலவியுள்ளது. பிற்காலத்திலேயே கன்னங்குடா கலைஞர்கள் கூத்துடன் தொடர்புடைய சகல விடயங்களிலும் தேர்ச்சி பெற்றுள்ளனர். எடுத்துக்காட்டாக, அரம்பகாலங்களில் ஆரையம்பதியைச் சேர்ந்த வளத்தாசி என்னும் மேஸ்திரியே (உடுப்புக் கட்டும் கலைஞர்) கன்னன்குடா கூத்தர்களுக்கு உடுப்புக் கட்டியதாகவும் பிற்காலங்களில் கன்னன்குடா கலைஞர்களான தம்பிப்போடி, முருகுப்பிள்ளை, வினாயகமூர்த்தி, சிவகுரு என்போர் மேஸ்திரிகளாக உருவானதாகவும் வெளியூர் மேஸ்திரிகளின் உதவியின்றி அவர்களே கூத்தர்களுக்கு உருப்புக் கட்டுவதற்கான திறனைப் பெற்றுள்ளதாகவும் அறியமுடிகிறது (பசுபதி,மா., முண்டாளமடு).

சமகாலத்தில் மேலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. கூத்தர்கள் ஒவ்வொரும் அவர்களுக்குரிய உடுப்பு, ஆயுதங்கள், அலங்காரம் பொருட்கள் என்பவற்றை தம்வசம் வைத்துள்ளனர். அத்துடன் உடுப்புக்கட்டுதல், அலங்காரம் செய்தல் என்பவற்றிலும் தேர்ச்சியுடையவர்களாக விளங்குகின்றனர். இதனைவிட கூத்தர்களின் உறவினர், மற்றும் கூத்தில் ஆர்வமுள்ள கன்னன்குடா மக்களும் இத்திறன்களைக் கொண்டிருந்தனர் (பிரபாகரன்,கு., கன்னன்குடா). இதே போன்று சீனித்தம்பி போன்ற அண்ணாவிமாரின் உதவியுடன் ஆரம்ப காலங்களில் கூத்துப் பழக்கியதனையும் பிற்காலங்களில் மயில்வாகனம், பொன்னம்பலம், இளையதம்பி, நாகமணிப்போடி, நோஞ்சிப்போடி போன்ற கன்னன்குடா அண்ணாவிமார் கூத்துப் பழக்கியதையும் காணமுடிகிறது. கூத்து ஒன்றை பழக்கி அரங்கேற்றுவது வரையான செயற்றொடரில் இடம்பெறும் சகல விடயங்களும் கன்னன்குடாக் கலைஞர்களினாலும் ஊர்மக்களினாலும் மேற்கொள்ளப்பட்டமை கன்னன்குடாவில் கூத்துச் செயற்பாட்டை இலகுவானமுறையில் முன்னெடுப்பதற்கு உதவியது.

கன்னன்குடா மக்களிடம் இருக்கும் கூத்தின் மேலான விருப்பமும் அதனைப் பார்த்து இரசிக்கும் ஆர்வமும் அடிப்படையானது. கூத்துக்கள் இக்கிராம மக்களுக்கு அவர்களின் வாழ்வுடன் இணைந்த அம்சமாகவே காணப்படுகின்றது. இது கிராம மக்களை இணைத்து கலைச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான பலத்தை அவர்களுக்கு வழங்கியது. விவசாயத்தை பிரதான வருமான மூலமாகக் கொண்ட இம்மக்கள் அறுவடை முடிவடைந்து பங்குனி சித்திரை மாதங்களில் கூத்துச் செயற்பாடுகளில் ஈடுபடத் தொடங்கி புரட்டாதி மாதம் வரை கூத்துச் செயற்பாடுகளுடன் அவர்களை இணைத்துக் கொள்வர். இக்காலத்தில் கன்னன்குடாவிலும் கன்னன்குடாவை அண்டிய பல கிராமங்களிலும் கூத்துக்கள் இடம்பெறும். இக்கூத்துக்களை பார்த்து மகிழ்தல் இவர்களின் பிரதான பொழுதுபோக்காக அமையும்.

வெளி ரங்கராஜன் அவர்கள் பாரம்பரிய கலைகள் வழங்கும் அழகியல் அனுபவம் பற்றி குறிப்பிடும் கருத்துக்கள் இங்கு நோக்கத்தக்கன. ‘‘கலை அனுமதிக்கின்ற அபூர்வமான சில தருணங்களில்தான் மனிதன் தன் தளைகளிலிருந்து வெளிப்படுகின்றான். பொழுதுபோக்கு என்கின்ற அம்சத்தைத் தாண்டி இது ஒரு இயற்கையைச் சரிக்கட்டும் போக்காகவும், கலாசார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் ஒடுக்கப்பட்ட உணர்வுகளுக்கான வடிகாலாகவும் இருக்கின்றது. பாடல், பாலியல் தன்மை, மதம் எல்லாவற்றையும் உள்ளடக்கி அவை மனிதனுடைய அதிகபட்ச பங்குகொள்ளுதலை உறுதி செய்கின்றன. சமூக, கலாசார

கட்டுப்பாடுகளால் பலவிதத்திலும் ஒடுக்கப்பட்ட மனிதன் தன்னுடைய வாழ்வியல் பிரச்சினைகளைத் தாண்டி இங்குதான் தன்னை ஒரு முழு மனிதனாகப் பார்க்கின்றான். எங்கே மனிதனுக்கு விடுதலையும் பூரணத்துவமும் நிகழ்கின்றதோ அது அவனுடைய நேரிடையான எல்லைகைளைத் தாண்ட அவனுக்கு அனுமதி வழங்குகின்றது. மனிதன் தன்னுடைய படைப்புப் பொறிகள் தூண்டப்படுவதை அங்கு பார்க்கின்றான்'' (2008:19-20). மக்கள் பாரம்பரிய கலைச் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கான அழகியல் காரணங்கள் பற்றிய கருத்துக்கள் கன்னன்குடா மக்களைப் பொறுத்தவரை மிகவும் பொருத்தமுடையனவாகவே விளங்குகின்றன. கூத்து வழங்கும் அழகியல் திருப்தி கூத்துக்காக மக்களை இணைப்பதில் முக்கிய சக்தியாகச் செயற்படுகிறது.

கன்னன்குடா கிராமத்தில் கூத்துப் பயில்வதையும் அதன் அளிக்கையையும் அவர்களின் இயல்வு வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்தாத விதத்திலேயே திட்டமிட்டிருந்தனர். ஓய்வாக இருக்கும் காலங்களிலும் வயல்வெளிகளில் அறுவடை செய்யும் போதும் ஏனைய வேலைகளில் ஈடுபடும் போதும் கூத்துப்பாடல்களை பாடுவதும், மத்தளத்தை அடிப்பதும் கூத்தின் சில தாளக்கட்டுக்களை ஆடிப்பார்ப்பதும் கன்னன்குடா மக்களின் பொழுதுபோக்காகவும் கூத்தை பயிலும் முறையாகவும் அமைந்திருந்தது. கன்னன்குடாவில் இன்று வாழும் தேர்ந்த அண்ணாவிகளில் ஒருவரான பசுபதி அவர்கள் 1972ஆம் ஆண்டில் அரங்கேற்றிய அவருடய முதலாவது கூத்தான ''குயலவநாடகம்'' (வடமோடி) வேளாண்மை அறுவடை செய்யும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த காலங்களில் அறுவடைச் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் இணைந்து பழகிய கூத்தாகும். அறுவடை முடித்து வந்து இரவு வேளைகளில் ஓய்வெடுக்கும் போது களத்துமேடுகளில் பொழுதுபோக்கிற்காக ஆடிப்பழகியுள்ளனர். அறுவடை வேலைகள் அனைத்தையும் முடித்து ஊருக்குத் திரும்பிய பின்னர் சதங்கை அணிவிழா நடத்தி பின்னர் அரங்கேற்றியுள்ளனர் (பசுபதி,மா., முண்டாளமடு). இந்த எடுத்துக்காட்டு இக்கிராம மக்களுக்கு கலை பயில்வு என்பது வாழ்வியல் செயற்பாடுகளில் இருந்து பிரிந்தறிய முடியாத ஒரு சமூக நிகழ்வாக அமைந்தள்ளது என்பதையும் அவர்களின் பொருளாதார ஈட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்தாதவிதத்தில் அமைந்திருந்தது என்பதையே தெளிவாகின்றது.

கூத்துப் புலமையும் இரசனை உணர்வும் கன்னன்குடா மக்களிடம் அமைந்திருந்ததால் புதிய கூத்தர்கள், கொப்பியாசிரியர், மேஸ்திரிமார், பக்கப்பாட்டுக்காரர் போன்றோர் உருவாதல் சாதாரண செயற்பாடாகவே இடம்பெற்றது. உருப்புக் கட்டுதல், மத்தளம் அடித்தல், களரி கட்டுதல், கொப்பி பார்த்தல் போன்ற சந்தர்ப்பங்களில் இளைய தலைமுறையினர் கூத்தர்களுக்கு ஒத்தாசி வழங்குதல் கூத்துச் செயற்பாட்டில் பொதுவான வழக்கமாக உள்ளதால் இது அவர்களுக்கு கூத்துடன் தொடர்புடைய பல விடயங்களையும் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்துகின்றது. சகல விடயங்களும் ஒளிவுமறைவு இன்றி மூத்த உறுப்பினர்களால் தேவை வரும் போது இளைய உறுப்பினர்களுக்கு கற்றுக் கொடுக்கப்பட்டது. கற்றுக் கொடுத்தல் என்பதற்கு அப்பால் கூத்துச் செயற்பாட்டில் ஈடுபடும்போதும் கூத்தை பார்த்து இரசிக்கும் போதும் அவர்களின் திறன்களை வளர்த்துக்கொண்டனர் எனலாம். புதிய கூத்தர்களுக்கு சிரமப்பட்டு பயிற்சியளிக்க வேண்டிய தேவை இருப்பதில்லை. அன்றாடம் கூத்துக்களை பார்த்து அதில் தேர்ச்சியுடையவர்களாக இருப்பதால் அவர்கள் பல விடயங்களை இயல்பாகவே கற்றுக்கொள்கின்றனர். இது பாரம்பரிய கலைப் பயில்வில் நாம் தென்னாசியப் பிராந்தியத்தில் அவதானிக்கக்கூடிய பொதுவான அம்சமாக உள்ளது.

கூத்துக்கள் சிறந்த அண்ணாவிமார்களால் பயிற்றுவிக்கப்படுகின்றன. கூத்தாடும் கலைஞர்களும் தேர்ச்சியும் திறனும் உடையவர்கள். கூத்தைப் பார்ப்பதற்காக கூடும் மக்களுக்கும் அதில் சிறந்த இரசனை உடையவர்கள். அதனால் அவர்கள் பயின்று அரங்கேற்றும் கூத்துக்களை சிறந்த கலைத் தரம் உடையதாக படைப்பதிலேயே கவனமாக இருக்கின்றனர். அவர்களின் கூத்துக்கள் பிரதேசத்தின் பல பகுதிகளிலும் களரியேற்றம் செய்யப்படுவதற்கு கலைத்தராதரமே காரணமாகும். மட்டக்களப்பின் பல பகுதியிலும் உள்ள மக்கள் கன்னன்குடா கூத்துக்களின் கலைத்தராதரத்தை உயர்வாகக் கருதியதன் வெளிப்பாடாகவே இது அமைகின்றது. குறித்த கூத்து எந்தனை களரியேற்றம் பெற்றுள்ளது என்பதை அடிப்படையாகக் கொண்டே கூத்தின் கலைத் தரம் தீர்மானிக்கப்படுகிறது. இது இன்றுவரை தொடர்கின்றது.

பல கிராமங்களில் கூத்தர்கள் எதிர்கொள்ளும் மிகப் பெரிய பிரச்சினை கூத்து செயற்பாடுகளுடன் தொடர்புடைய பொருளாதாரச் செலவை ஈடுசெய்ய முடியாமையகும். பல கிராமங்களில் கூத்துச் செயற்பாடுகள் விடுபட்டுப்போனதற்கு இது அடிப்படையானதொரு காரணமாகும். கன்னன்குடா கிராமத்தவர் இப்பிரச்சினையை தீர்த்துக்கொள்வதற்கான உபாயங்களைக் கையாண்டுள்ளது அவர்களிடம் கூத்து நின்று நிலைப்பதற்கான அடிப்படைக் காரணமாகும். பொதுவாக கூத்தில் பெரியளவான செலவு அண்ணாவியார் கூலி, மேஸ்திரி, சதங்கைக்கான செலவு என்பனற்றிலேயே ஏற்படுகின்றது. கன்னன்குடாவில் அண்ணாவிமார் உள்ளதால் அவர்களுக்காக பெரும் தொகைப் பணத்தைச் செலவு செய்யும் தேவை அவர்களுக்கு ஏற்படுவதில்லை. அடுத்து ஒவ்வொரு கூத்தரும் அவர்களுக்கான உடுப்பு, ஒப்பனைப் பொருட்கள், சதங்கை என்பவற்றை சொந்தமாக வைத்திருப்பர். அத்துடன் அவர்களே உடுப்புக் கட்டுவதற்கும் மற்றும ஒப்பனை செய்வதற்குமுரிய தேர்ச்சியையும் பெற்றுள்ளனர்.

இவர்கள் வெளிக்கிராமங்களுக்கு அவர்களின் கூத்துக்களை அளிக்கை செய்யவதற்காக செல்லும் போது அதற்காக அவர்களிடம் குறிப்பிட்ட தொகை பணத்தை பெற்றுக் கொள்கின்றனர். இப்பணத்தை கொண்டு அவர்களுக்கு ஏற்படும் கூத்துடன் தொடர்புடைய அண்ணாவியார் கொடுப்பனவு, களரி அமைத்தலுடன் தொடர்புடைய செலவு, அரங்கேற்றத்தின் போது ஏற்படும் செலவு என்பவற்றை ஈடுசெய்கின்றனர். இந்நிலையில் கூத்து செயற்பாட்டில் ஈடுபடுதல் பொருளாதாரரீதியான சுமையை அவர்களுக்கு ஏற்படுத்துவதில்லை.

அநேகமான கூத்தாடும் பிரதேசங்களில் ஏற்படும் பிரச்சினையாக விளங்குவது பொருத்தமான கூத்தர்களைத் தெரிவு செய்வதும் அவர்களை ஒன்றிணைத்து கூத்துப் பயிற்சிகளை வழங்கி அரங்கேற்றத்தை நோக்கிக் கூத்தைக் கொண்டு செல்வதுமாகும். கன்னன்குடா கிராம மக்கள் இளமைக்காலத்தில் இருந்தே கூத்துக் கலையில் ஆர்வமுடையவர்களாக விளங்குவதால் கூத்துப்பழகுவதற்காக கூத்தர்களை இணைத்துக் கொள்வது அவர்களுக்கு ஒரு பிரச்சினையாக அமைவதில்லை. இவர்கள் நிறுவனப்படுத்தப்பட்ட அமைப்பாக சமகாலத்தில் செயற்படுவதால் குறிப்பிட்ட உறுப்பினர்களைக் கூத்தாடுவதற்கென கொண்டிருப்பதும் காலத்திற்கு காலம் தேவைக்கேற்ப புதிய உறுப்பினர்களை இணைத்துக் கொள்வதும் இவர்களின் சாதாரண செயற்பாடாக அமைந்துள்ளது.

குடும்ப உறுப்பினர்கள் கூத்தாடுவதற்கு தடைவிதிப்பது கூத்து விடுபட்ட கிராமங்களில் அடையாளங்காணப்பட்ட முக்கிய பிரச்சினையாக விளங்குகின்றது. குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து கூத்துச் செயற்பாட்டிற்கு பங்கேற்பதால் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுவதில்லை. கன்னன்குடா மக்களிடம் நிலவும் கூத்துடன் தொடர்பான சில நம்பிக்கைகள் சமூகத்தின் ஒத்துழைப்பு கூத்துச் செயற்பாட்டிற்கு கிடைப்பதற்கான காரணங்களில் ஒன்றாக விளங்குகின்றது. ''கூத்து நடைபெறும் காலங்களில் கண்ணகியம்மன் கிராமத்தவர்களுடன் இருந்து கூத்துப் பார்த்து இரசிக்கின்றார்'' என்னும் ஒரு நம்பிக்கை கிராமத்தவர்களிடம் இன்றுவரை நிலவுகின்றது (சிந்தாத்துரை,சி., கன்னன்குடா). அவர்கள் வழிபடும் குல தெய்வம் கூத்து கலைமேல் விருப்பமாக உள்ளார் என்னும் கிராமத்தவர்களின் நம்பிக்கை கிராம மக்கள் அனைவரையும் கூத்துடன் ஒன்றிணைப்பதுடன் கூத்துக்களை ஒவ்வொரு வருடமும் கூத்தாடுவதற்கு தூண்டுவதாகவும் அமைகின்றது.

கூத்துக்கலையை சகல பிரதேசங்களிலும் தொடர்ந்து பயில்வதற்கான ஓத்தாசைகளை வழங்க வேண்டும் என்னும் உயரிய நோக்கு கன்னன்குடா மக்களிடம் காணப்படுகின்றது. இந்நோக்குநிலையின் காரணமாக பல அயல்கிராமங்களின் கூத்துக்கலைஞர்கள் கன்னன்குடாவில் கூத்தை பயின்று அவர்களின் கிராமங்களில் விரிவுபடுத்தியுள்ளனர். இதனை விட கன்னன்குடாக் கலைஞர்கள் அயல் கிராமங்களுக்குச் சென்று கூத்தை பயிற்றுவிப்பதில் ஆர்வமுடையவர்களாகவும் உள்ளனர்.

மண்முனை மேற்குப் பிரதேச செயலகம் 2017 ஆம் ஆண்டில் பயில்லில் உள்ள தமது பிரதேசத்திலுள்ள அண்ணாவிமார், கொப்பியாசிரியர்கள், மேஸ்திரி, கூத்துக்கலைஞர்கள் என 30 பேரை அடையாளங்கண்டு

அவர்களுக்கான ஒரு பயிலரங்கினை 15.08.2017 அன்று மேற்கொண்டது. அதில் கலந்துகொண்டோரில் அதிகமானவர்கள் கன்னன்குடாவுடன் தொடர்புடையவர்களாகவே காணப்பட்டனர். பலர் கன்னன்குடாவில் பிறந்து கன்னன்குடாவை அண்டிய அயல் கிராமங்களில் வாழ்பவர்களாகவும், கன்னன்குடாவில் கூத்து பயின்று அண்ணாவியாகவும், கொப்பியாசிரியராகவும், கூத்தராகவும் காணப்படுகின்றனர். இதனைவிட இங்கு வழங்கப்பட்டுள்ள கலைஞர்களில் சிலர் கன்னங்குடாவைச் சேர்ந்த கூத்தர்களிடம் கூத்துப் பயின்றவர்களாகவும் காணப்படுகின்றனர் (தனுஷ்யா,யோ., மண்முனை மேற்கு பிரதேச செயலகம், வவுணதீவு). இது கன்னன்குடாவின் பாதிப்பு இப்பிரதேசத்தில் கூத்துக்கலை வளர்ச்சியில் செலுத்தும் செல்வாக்கினை வெளிப்படுத்துவதாகவே உள்ளது.

கன்னன்குடா மட்டக்களப்பில் இன்று கூத்துப் பயிலப்பட்டுவரும் கிராமங்களில் குறிப்பிடத்தக்க ஒன்றாக விளங்குகின்றது என்பதை இங்கு நாம் உறுதிப்படுத்தக்கூடியதாக உள்ளது. இக்கிராமத்தில பல தலைமுறைகளைத் தாண்டி கூத்துச் செயற்பாடு தொடர்ச்சியாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. நாகமணிப்போடி, நோஞ்சிப்போடி, மயில்வாகனம், இளையதம்பி, பொன்னம்பலம் போன்ற அண்ணாவிமமார் கூத்துச் செயற்பாட்டில் ஈடுபட்ட காலத்துடன் ஒப்பிடும் போது பிற்காலத்தில் கன்னன்குடாச் சமூகத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

சமகாலத்தில் கன்னன்குடா சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களில் ஒன்றாக கற்றோரின் உருவாக்கமும் அரச தொழில் வாய்ப்புமாகும். இது சுய உற்பத்திப் பொருளாதாரத்தில் இருந்து அரச நிறுவனங்களில் தொழில் புரிவதன் மூலம் ஈட்டப்படும் வருமானத்தில் மக்களின் கவனத்தைக் குவியச் செய்கின்றது. இருந்தும் பாரம்பரிய நில மானிய அமைப்பை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முறைமை தொடர்ந்து பேணப்படுகிறது. தற்காலத்தில் கூத்துச் செயற்பாட்டில் ஈடுபடுபவர்களில் அனேக அரச நிறுவனங்களில் தொழில் புரிவோராக உள்ளனர். சுய பொருளாதார ஈட்டத்தில் ஈடுபட்ட வேளையில் கலைச் செயற்பாட்டில் ஈடுபட்ட காலங்களைப் போன்று கலைச் செயற்பாட்டில் முழு அர்பணிப்புடன் ஈடுபடுவதில் அவர்கள் சில தடைகளை அடையாளம் காண்கின்றனர். பல கூத்துச் செயற்பாட்டாளர் வெளி கிராமங்களுக்கு சென்று திருமணம் செய்தது இக்கிராம கூத்துச் செயற்பாட்டாளர் எதிர்கொள்ளும் இன்னொரு பிரச்சினையாக விளங்குகின்றது. இருந்தும் இவர்கள் வெளியூர்களில் வாழ்ந்தாலும் கன்னன்குடாவின் கூத்துச் செயற்பாடுகளுக்கு அவர்களின் ஒத்துழைப்புக்களை எப்போதும் வழங்கிக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இருந்தும் தொடர்ச்சியாக கலைச் செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும் என்னும் உறுதியான நிலைப்பாடு அச்சமூகத்தில் நிலவுகின்றது. அவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்காகவே சமகாலத்தில் நிறுவனப்படுத்தப்பட்ட அமைப்பாகச் செயற்படுகின்றனர்.

இவ்வாறு கன்னன்குடா கிராமம் தனது கிராமத்தில் கூத்துச் செயற்பாட்டை செழிப்பான முறையில் தொடர்ச்சியாகப் பேணுவதற்கு உரிய அனைத்து பொறிமுறைகளையும் உருவாக்கிச் செயற்படுவதுடன் பிரதேசத்தின் கூத்துக் கலை வளர்ச்சிக்கும் பங்காற்றும் ஒரு கிராமமமாகவே செயற்படுகின்றது எனலாம்.

### முடிவுரை (Conclusion)

கன்னன்குடா கிராமத்தில் கூத்து இன்றுவரை செழிப்பாக பயிலப்படுவதற்கு அக்கிராமத்தில் கூத்து கலை பாரமபரியமான முறைப்படி பயிலப்பட்டு வருவதும், அது பயிலப்படுவதற்கான வளங்கள் அனைத்தும் அங்கு காணப்படுவதும், கன்னன்குடா மக்களின் வாழ்கை முறை விவசாய பொருளாதர அமைப்பில் இருந்து முழுமையாக மாறுபடாமல் தொடரப்படுவதும், பாரம்பரிய சமய வழிபாடு அவர்களிடம் வேரூன்றியுள்ளதும் அது தொடர்பான நம்பிக்கைகளும், கூத்துச் செயற்பாட்டை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் என்னும் ஆர்வம் மக்களிடம் காணப்படுவதும், சமூக ஒற்றுமை குலையாது குறித்த நோக்குடன் செயற்படுவதும் அடிப்படைக் காரணங்களாக விளங்குகின்றன. மட்டக்களப்பல் பாரம்பரியமாக கூத்துக்கலை பயிலப்பட்டு வந்த கிராமங்களில் சமகாலத்தில் கூத்துக்கலை பயிலப்படாமல் விடுபட்டுப் போனதற்கு மேற்குறித்த அம்சங்களின் பாதிப்பே காரணமாகும். சமூகங்களில் நிலவும் வாழ்வியல் தேவைகளே கூத்தின் பயில்வைத் தீர்மானிப்பனவாக விளங்குகின்றன. இந்நிலையில் சமூக மாற்றமே பல கிராமங்களில் கூத்தின் பயில்வைப் பாதித்த காரணியாக விளங்குகின்றது.

**சான்றாதாரம் (Reference)**

**நூல்கள்**

1. மௌனகுரு,சி., (2004) **ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு**, கொழும்பு, குமரன் புத்தக இல்லம்.
2. ----------------- (1998), **மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்,** மட்டக்களப்பு, விபுலம் வெளியீடு- 07.
3. ரங்கராஜன், வெளி., (2008), **நாடகம், நிகழ்வு, அழகியல் நிகழ்த்துகை அழகியல் பற்றிய கட்டுரைகள்,** சென்னை, அடையாளம்.
4. வித்தியானந்தன், சு., (1990), **நாடகம் நாட்டாரியற் சிந்தனை**, தெல்லிப்பளை, தமிழகம் வெளியீடு – 01.
5. ஜெயசங்கர்,சி. (2011), **கூத்து மீளுருவாக்கம் ஈழக்கூத்தின் புதிய பரிமாணம்**, மதுரை, இந்தியா, கருத்து ஸ்ரீ பட்டறை.

**நேர்காணல்**

பெயர், தொழில், கல்வி, வயது, விலாசம், சந்தித்த தினம் என்னும் ஒழுங்கில்

1. சதாகரன்,த., கிராமசேவை உத்தியோகஸ்தர், B.A பட்டப்படிப்பு, 34, மண்முனை மேற்கு பிரதேச செயலகம் (வவுணதீவு), 16.08.2017.
2. சிந்தாத்துரை,சி., தெளிகருவி இயக்குணர், சுகாதாரத் திணைக்களம், க.பொ.த (உ/த), கன்னன்குடா, 16.08.2017
3. சிவநிதி,நே., அபிவிருத்தி உத்தியோகஸ்தர், B.A பட்டப்படிப்பு, 36, புதுமண்டபத்தடி, 16.08.2017.
4. தனுஷ்யா, யோகேந்திரன்., கலாசார உத்தியோகஸ்தர், B.A பட்டப்படிப்பு, 31, மண்முனை மேற்கு பிரதேச செயலகம் (வவுணதீவு), 16.08.2017.
5. பசுபதி,மா., அண்ணாவி/விவசாயம், 4ஆம் வகுப்பு, 63, முண்டாளமடு, புதுமண்டபத்தடி, 20.08.2017.
6. பிரபாகரன்,கு, கூத்துக்கலைஞர்/ஆசிரியர், B.A பட்டப்படிப்பு, 35, கன்னன்குடா, 18.07.2017.